


79
லயன்
காமிக்ஸ்
Operation
அலாவுதீன்!


சிக் பில் குழுவினர் தோன்றும்
மினி லயன்
கொலைகாரக் காதலி!
96 பக்கங்கள்!
விலை ரூ. 4-
வயிறு குலுங்கச் சிரிக்கச் செய்யும் காமெடி!



# ஹாட்-லைன்

வாசக நண்பர்களே,

ரூ. 5000/- பரிசுப் போட்டிக்கான ஆல்பங்கள் தினமும் தபாலில் வந்து குவிந்த வண்ணம் உள்ளன!

போன மாதத்து இதழில் (பொக்கிஷம் தேடிய பிசாசு) அறிவித்திருந்தது போல அல்லாது குலுக்கலுக்கான கடைசித் தேதியை 5.11.91 வரை extend பண்ணியுள்ளோம். இதற்குக் காரணம் உண்டு:

சேலம், திருநெல்வேலி, மற்றும் சில ஊர்களுக்கு **"பொக்கிஷம் தேடிய பிசாசு"** மிகவும் லேட்டாக விற்பனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகையால் அந்த ஊர் வாசகர்களும் ஆல்பத்தைப்பூர்த்தி செய்து குலுக்கலில் கலந்துகொள்ள கொஞ்சம் அவகாசம் கொடுத்திருக்கிறோம்.

குலுக்கலில் வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலிகளின் விபரம் அடுத்த வெளியீடான **"ஒரு பனிமலை பயங்கர"**த்தில் வெளிவரும்!

**"பழி வாங்கும் புயல்"** ரூ.6/- விலையில் டெக்ஸ் வில்லரின் சூப்பர் சாகஸத்துடன் ஜனவரி மாதம் வரயிருக்கிறது!

புதிய ஹீரோக்கள் சிலரை அறிமுகப்படுத்தும் முயற்சி நடந்து கொண்டிருக்கிறது!

அது பற்றிய விபரங்களை ஜனவரி இதழில் எழுதுகிறேன்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!



அன்புள்ள,

S. விஜயன்

ஆசிரியர்.



C.I.D.
ரிப் கிர்பி
தோன்றும்
Operation
அலாவுதீன்!
லயன்
காமிக்ஸ்
ரூ. 3/-
புத்தம்
புதிய
சஸ்பென்ஸ்


மத்திய தரைக்கடலின் அருகே ஒரு செழிப்பான அரபு நகரம்..!
டூரிஸ்ட் ஒருவர் பஜாரை நோட்ட மிட்டுக் கொண் டிருந்தார்.
ம்ம்ம்..சின்னதாக ஏதாவது ஒரு பொருள் இந்த ஊரின் அடை யாளமாக வேண்டும்!
சாருக்கு நான் உதவலாமா?
இந்த ஊரின் ஞாப கார்த்தமாக ஏதாவது ஒரு பொருள் வாங்கிப் போக வேண்டும்!
இந்த புராதன வாள் எப்படி யிருக்கிறது சார்?
ம்ம்ம்.. இல்லே..!
ஓஓ..அப்படியானால் இந்த வெள்ளி பெல்ட்! சாரின் காதலி இதைக் கண்டவுடன் சொக்கிப் போவார்!
நோ! எனக்கு வேண்டியதெல்லாம் சின்னதாய் ஏதாவது ஒன்று!
நான் எப்போதுமே பெரியளவிலேயே சிந்திப்பவன் சார்!


இதோ கிடைத்து விட்டது சார்! எங்கள் நகரின் அழகின் பின்னிய அருமையான சால்வை! இதைப் பார்த்தால் மேடம் திகைத்துப் போவார்!
ம்ம்ம்-இதை என் பியானோவுக்குக் கூட போர்த்த முடியாது!
இன்னும் 'பளிச்'சென்று ஏதாவது-
உங்களின் வரலாற்று சிறப் புமிக்க நாட்டை ஞாபகப் படுத்துவது மாதிரி!
ஆஹா! இதோ கிடைத்து விட்டது! எத்தனையோ அராபிய இரவுகளுக்கு வெளிச்சமிட்ட புராதன விளக்கு!
சாதாரண விளக்கு சார்! காயலான் கடை சரக்கு!
பழையது தான்! ஆனால் என்னவோ தெரியலே-என்னை ஈர்க்கிறது!
அலாவுதீன் விளக்கு எப்படியிருக் குமென்று ரொம்ப காலமாக பார்க்க ஆசை! இதைப் போலத் தான் அதுவும் இருந்திருக்க வேண்டும்! இதை எடுத்துக் கொள்கிறேன்!
ஆகட்டும் சார்! ஆனால் இதைத் துடைத்தவுடன் பூதம் வருமென்று எதிர்பார்க்கா தீர்கள்!
அப்படியே பூதம் வந்தால் அதை உன்னிடம் அனுப்பி விடுகிறேன்! திருப்தி தானே?


இந்தப் பழைய விளக்கைப் பார்த்தவுடன் டெஸ்மாண்டின் கைகள் துறுதுறுக்கும்! உடனே துடைக்க ஆரம்பித்து விடுவான்!
ரிப்பின் எண்ணம் சரியே-
பாவம்-இந்த விளக்கை துடைக்கக்கூட ஆளில்லே இத்தனை காலமாய்!
அழைத்தீர்களா சார்!
யம்மாடியோவ்!
மன்னிக்க வேண்டும் சார்! நீங்கள் கேட்டது புரியவில்லை எனக்கு!
"யம்மாடியோவ்"னு வந்து வந்து-
உங்கள் தேவை என்னவோ சார்?
சே-ரொம்ப சாரிப்பா! அது வந்து இந்தப் பழைய விளக்கைத் துடைச்சிக்கிட்டிருந்தேனா? வேண்டுமென்றே உன் நித்திரையை கலைக்க நினைக்கலே!


புராதன விளக்கு ஒரு விசித்திர உருவத்தை வரச் செய்கிறது.
என்ன வேண்டுமென்று இன்னமும் சொல்லவில்லையே சார்!
பிரமாதமாக ஒன்றும் வேண்டாம்!
நான் பாட்டுக்கு விளக்கிலுள்ள அழுக்கைத் தான் துடைச்சிக்கிட்டிருந்தேன்! இப்படி ஒரு பூதம் வருமென்று எதிர்பார்க்கவில்லை!
பூதமா? நோ-நோ! நான் இந்த ஹோட்டலில் பட்லர் சார்! தற்செயலாக நீங்கள் இந்த அழைப்பு மணியை அமுக்கியிருப்பீர்களென்று நினைக்கிறேன்!
ப்பூ-! இவ்வளவு தானா?
அப்படியானால் நீ பூதமுமில்லை-நான் நாகரீக அலாவுதீனுமில்லை என்று சொல்!
ஆமாம் சார்! என் உதவி தேவையென்றால் அந்த பட்டனை அமுக்குங்கள்- விளக்கை அல்ல!
டெஸ்மாண்டின் பிரமிப்பு பட்டென்று பறந்தது!
அதே கணத்தில் பஜாரில் ஒரு நபரின் உயிரும் பறந்திருந்தது!
கொலை! கொலை!
கடைக்காரரை இந்தக் கோலத்தில் தான் பார்த்தாளாமா?
ஆமாம்! அந்த ஆபரணம் பதித்த கத்தி அவர் நெஞ்சில் சொருகியிருந்தது!


கத்தியில் ஏதாவது
கைரேகைகள்
கிடைக்கின்றனவா
என்று பார்ஙான்
இங்கு இன்னும்
கொஞ்சம் துருவிப்
பார்க்கிறேன்!
ஆகட்டும்
இன்ஸ்பெக்டர்
சார்!
ம்ம்ம்-கடைசியாக ரிப் கிர்பி
என்ற அமெரிக்கன் தான்
இந்தக் கடையில் ஏதோ
வாங்கியிருக்கிறான்! 'ஹோட்
டல் எக்செல்'
என்ற முகவரி
யைக் கொடுத்
திருக்கிறான்!
அங்கேயோ-
நானும் கூமுட்டை மாதிரி விளக்கி
லிருந்து தான் பூதம்
வந்தது என்று நினைத்
துக் கொண்டேன்
சார்!
அலாவுதீனுக்கு
ரொம்ப வயதாகி
விட்டதென்று
பூதம் நினைத்
திருக்கும்!
அது சரி-விளக்
கிலிருந்து நிஜமா
கவே பூதம் வந்
தால் என்ன
வேண்டுமென்று
கேட்பாய்
டெஸ்மாண்ட்?
வேறென்ன சார்?
தலை நிறைய
'கருகரு'ன்னு முடி
வேணும் என்று
கேட்பேன்!
மிஸ்டர் ரிப் கிர்பியைப்
பார்க்க இன்ஸ்பெக்டர்
அஹமது வந்துள்ளேன்!
வ வந்து-


மிஸ்டர் கிர்பியிடம் அவர் இருக்கிறாரா என்று கேட்டு வருகிறேன்!
அந்த சிரமம் உமக்கு வேண்டாம் தாத்தா! நானே கேட்டுக் கொள்கிறேன்!
நான் தான் ரிப் கிர்பி இன்ஸ்பெக்டர்! உள்ளே வாருங்கள்!
என்ன வேண்டும் சார்?
இந்த விளக்கை உங்களுக்கு விற்ற கடைக் காரரின் கொலையைப் பற்றித் தெரிய வேண்டும்!
அங்கே பஜாரில் கூட்டம் கூடியிருந்தது
ஒரு பெண் பிணத்தைப் பார்த்தாளாம்!
பயத்தில் மயங்கி விட்டாள்!
அடப்பாவமே! கொலை செய்யப்பட்டு விட்டானா? எனது அனுதாபங்கள் இன்ஸ்பெக்டர்!
உங்கள் பெயர் தான் கடைசி பில்லில் இருந்தது-!
பாழாய்ப் போ றவிளக்கு நம்மை இக்கட்டில் மாட்டி விடும் போலுள்ளதே!


அந்த வியாபாரியை உயிரோடு பார்த்த கடைசி நபர் நீங்கள்தான் மிஸ்டர் கிர்பி - அதாவது கொலைகாரன் நீங்களாக!
கடையில் வேறு யாரும் இருந்த மாதிரித் தெரியவில்லையே இன்ஸ்பெக்டர்! பணம் ஏதும் திருடு போயிருந்ததா?
கல்லாப்பெட்டியை யாரும் தொடவில்லை! கொலைக்கு ஒரு காரணம் இருப்பதாகவே தெரியவில்லை!
கொஞ்சம் பொறுங்கள்! காயலான் கடைச் சரக்கு போல் தெரியும் இந்த விளக்கில் ஏதோ மர்மம் உள்ளதாகப் படுகிறது எனக்கு!
என்ன சொல்ல வருகிறீர்கள் மிஸ்டர் கிர்பி?
நன்றாகத் துடைத்த பிறகு விளக்கைப் பார்க்கும் போது புதுசாக சில டிசைன்கள் தென்படுகின்றன! பூதக் கண்ணாடியை கொண்டு வா டெஸ்மாண்ட்!
நம்பவே முடியவில்லை! இது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததொரு கலைப் பொருள்!
நிஜமாகவா? அப்படியானால் இதன் விலை பல ஆயிரம் டாலர்களாக இருக்குமே!
யெஸ்! அப்படியிருக்க வெறும் காலணாவிற்கு மட்டும் இதை எப்படி விற்க நேர்ந்தது? கொலைக்குக் காரணமே இந்த குளறுபடியாக இருக்குமோ?


செத்துப்போன வியாபாரி தவறுதலாக இதை என்னிடம் விற்று விட்டா ரென்று நினைக்கிறேன்!
யெஸ்! தவறு தெரிய வந்தவுடன் அவனது கூட்டாளி ஆத்திரத்தில் கொன்று விட்டா ரென்று நினைக்கிறேன்!
இந்தப் பகுதிகளில் புராதனக் கல்லறைகளைச் சூறையாடி அதில் கிடைக்கும் கலைப் பொருட்களை விற்பது ஒரு பெரிய வியாபாரம் மிஸ்டர் கிர்பி!
நமது யூகம் சரியாக இருக்குமேயானால் உங்கள் பெயரை கொலைகாரன் பார்த்திருப்பான்! நிச்சயம் உங்களைத் தேடி வருவான்!
இந்த விளக்கை என்ன செய்வது இன்ஸ்பெக்டர்?
இப்போதைக்கு உங்களிடமே இருக்கட்டும்!
ஏதாவது சின்ன துப்பு கிடைத்தால் கூட உடனே எங்களிடம் சொல்லுங்கள்! விவகாரம் ரொம்ப ஆபத்தானது!
அதே சமயம் நகரின் பிறிதொரு பகுதியில்-
பயலின் பெயர் ரிப் கிர்பி! ஹோட்டல் எக்செல்ஸில் தங்கி யிருக்கிறான்!
அது சரி- ஆசாமி பார்ப்பதற்கு எப்படியிருப்பான்?


அவன் எப்படியிருப்பான் என்பது பற்றிய நினைப்பு உனக்குத் தேவையில்லை! நம் குறி அவனது பர்ஸ் மீது தான்! புரிகிறதா ஷாரி?
ம்ம்ம்- அந்த கிர்பி ஒரு ஆணழகனாக இருந்தால் என நாட்டியம் இன்னும் சிறப்பாக அமையும்!
ஹோட்டலுக்கு கிர்பி வந்தவுடன மேனேஜர் சைகை காட்டுவான்! எவ்வளவு சீக்கிரம் முடியுமோ- அவ்வளவு சீக்கிரமாய் அவனை என்னிடம் அழைத்து வா!
அன்றிரவு-
ம்ம்ம்- ஆசாமி பரவாயில்லை!
சற்றைக்கெல்லாம் நாட்டியம் ஆரம்பித்தது-
ஷாரியின் அசைவுகள் கிர்பியை திகைக்கச் செய்கின்றன-
அவள் என்னையே பார்ப்பது போல் தோன்றுகிறதே! நிஜம் தானா- அல்லது என் கற்பனையா?


ரம்மியமான இசைக்கேற்ப ஷாரியின் நாட்டியம் தொடர்ந்தது.
திடீரென்று ஒரு தங்க பிரேஸ்லட் பறந்து சென்றது!
கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்ச்சுக்கிட்டு கொடுக்குதுடோய்!
ரிப் கிர்பியிடம் அடைக்கலமானது!
இந்த மாதிரி சமாச்சாரங்களெல்லாம் என்னைத் தேடி ஏன் வரமாட்டேங்குது?
வாயை மூடிக்கொண்டு சாப்பிடுங்கள் ஆல்பர்ட்!
ஷாரியின் இதழ்களில் ஒரு புன்னகை பூத்தது!
மனுஷன் சுறுசுறுப்பாகத் தான் இருக்கிறார் பலே!
அடுத்து என்ன?


ஷாரியின் நடனம் முடிவுற்ற போது பலமான கரவொலி எழுந்தது.
பிரெஸ்லெட்டை அவரே கொண்டு வந்து கொடுத்தால் வசதியாக இருக்கும்!
ஷாரியின் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை!
ரொம்ப ஸாரி! பிரஸ்லட் நழுவி விட்டது!
மை ப்ளெஷர். என்னோடு உணவருந்த வருகிறீர்களா!
இந்தாருங்கள் உங்கள் பிரேஸ்லெட்! நாம் சந்திப்பதற்கு வழி வகுத்துக் கொடுத்ததற்காக நன்றி சொல்ல வேண்டும் இதற்கு!
உங்கள் பேச்சும் உங்களைப் போலவே இனிப்பாக உள்ளது ரிப்!
ரிப்பிற்கு புதியதொரு சகவாசம் கிடைத்த அதே நேரத்தில்.
டெஸ்மாண்டும் ஒரு புது நண்பனை சந்திக்க நேரிடுகிறது!
பப்பிள் கம் வேணுமா தாத்தா?
அச்சச்சோ. எல்லாம் கொட்டி விட்டதே!
பப்பிள் கம் மெல்ல பல் வேணும்! என்னோட பிஸ்கட்டை வாங்கி சாப்பிடுங்க தாத்தா?



எல்லாம் உங்களால் தான்!
சாரி! எடுத்து டப்பாவில் போட்டு விடலாம்!
திடீரென்று சிறு விரல்கள் டெஸ்மாண்டின் பர்ஸை நோக்கிப் பறக்கின்றன-
ஆனால் டெஸ்மாண்ட் சுதாரித்துக் கொண்டு-
அவ்வளவு வேகமாக எங்கே கிளம்பிட்டே தம்பி?
என்னை விடு!
இதோ- நொடியில்!
அதற்கு முன்னால் உன் விரல்களோடு ஒட்டிக் கொண்டிருக்கும் இந்த பர்ஸிற்கு விடுதலை கொடுத்து விடுகிறேன்!
என்ன கலாட்டா இங்கே?


அங்கே சீப், ஷசியுடன் பேசிக் கொண்டிருந்தார்.
போலீஸ்காரர் வந்தவுடன் நிலைமை சகஜமாகியது-
அட-பீக் பாக்கெட் அலியா? உன் வழக்கமான வேலையை காட்ட ஆரம்பித்து விட்டாயா?
நோ! நோ! சிறிய தவறு நடந்து விட்டது ஆபீஸர்! என் பர்ஸ் பத்திரமாக உள்ளது! இதோ-
பணம் ஏதும் குறைகிறதா என்று பார்த்து கொள்ளுங்கள் சார்! பொல்லாத பயல் இவன்!
பாவம் சார்! அவனை விட்டு விடுங்கள்!
பையன் பிஸ்கெட் விற்று நாணயமாக பிழைத்து வருகிறான்! அவனை ஊக்குவிக்க வேண்டியது நம் கடமை சார்!
நான்தான் உங்கள் பர்ஸை 'அடித்தேன்' என்பது தெரியுமே-என்னை ஏன் காட்டிக் கொடுக்காமல் விட்டு விட்டீர்கள்?


அது வந்து· உன்னைப் பார்த்த
வுடன் என்னவோ பழசெல்
லாம் ஞாபகத்திற்கு
வந்தது!
என்ன
சொல்றீங்க?
ம்ம்ம்· ஒரு காலத்தில் நானும் உன்
னைப் போலத்தான் தறுதலையாக
சுற்றிக் கொண்டிருந்தேன்! உங்
கப்பா சிறு பிள்ளையாக இருக்கும்
போதே நான் ஜேப்படித் தொழி
லுக்கு வந்து விட்டேன் கண்ணு!
அது சரி· நீ செய்யும் காரியம்
உன் வீட்டிற்குத் தெரியுமா?
எ-எனக்கு
வீடும் கிடையாது· அப்பா,
அம்மாவும் கிடையாது சார்·
அடப்பாவமே!
கடவுள் உன்னை
ரொம்பத்தான்
சோதிக்கிறார்!
எ-எனக்குப் பழகிப்
போச்சு சார்! எப்படி
யாவது நான் பிழைத்
துக் கொள்வேன்!
இனம் புரியாததொரு
ஸ்நேகம் அங்கே மலர்ந்தது.
நான் அயோக்கியனாக
இருந்தது நிஜம்தான·
ஆனால் கொஞ்ச காலம் கழித்து திருந்தி
விட்டேன்! நீயும் திருந்த முயற்சி செய்து
பார் அப்துல்லா!
பா-பார்க்கிறேன் சார்!



எனக்குத் தெரியும்! நீ திருந்தி விடுவாய்!
திருந்தப் பார்க்கிறேன் என்று தானே சொன்னேன் மிஸ்டர் டெஸ்மாண்ட்!
அதோ வருகிறாரே மிஸ்டர் கிரபி. அவர் பெரிய நூலறிவாளர். அவரிடம் தான் நான் பட்லராக வேலை செய்கிறேன்!
அட பெல்லி டான்ஸர் ஷெரியோடு காரில் ஏறுகிறாரே!
அலி! அநாவசியப் பேச்சு கூடாது!
டூரிஸ்ட்கள் வழக்கமாகப் பார்க்கும் இடங்களைத் தானே நீங்களும் பார்த்திருப்பீர்கள்? நான் புதிதாக சில இடங்களைச் சுற்றிக் காட்டுகிறேன் உங்களுக்கு!
நாம் இப்போது எங்கே போகிறோம் ஷெரி?
ஷெரியின் திட்டம் என்னவென்பதை அறியும் எண்ணத்தில் ரிப் சம்மதித்தார்!
பொடியனின் பார்வையிலிருந்து அவர்கள் தப்பவில்லை!
மிஸ்டர் டெஸ்மாண்ட், நான் சொல்வதைக் கேளுங்கள்!
மிஸ்டர் கிரபி ஒரு ஜெண்டில் மேன்! என்ன செய்கிறோம் என்று அவருக்குத் தெரியும்!
அப்படியானால் சரி!


ரிப் கெர்பி ஷாரியுடன் செல்வதை இன்னொருவன் கவனித்துக் கொண்டிருந்தான்!
ஷாரி ஜெயித்து விடுவாள்-கராட் சந்தோஷப் படுவார்.
குட்பை- உனக்கு பாடம் கற்பிக்க உன்னிடமிருந்து நான் தேட்டை போட்ட குயிங்கம்-இந்தா!
தாங்க்ஸ் மிஸ்டர் டெஸ்மாண்ட்!
என்னை அந்த போலீஸ்காரனோடு அனுப்பிவிடாததற்கு நன்றியாக இந்தாருங்கள் உங்களுடைய பர்ஸ்!
கேலியாக நகைத்தவாறு ஓடி மறைந்தான் அந்தப் பொடியன்-
சமர்த்து பையன்! பர்ஸில் வைத்த பணம் அப்படியே இருக்கிறது!
ஹோட்டல்களில் செய்தி பரவுகிறது ரிப். போலீஸ் இன்ஸ்பெக்டர் அகமது இன்று உங்களைக் காண வந்திருந்தாராமே?
ஆமாம்-ஷாரி!
ம்ம்-ம்ம் ப்ரேஸ்லெட் பறந்து வந்தது தற்செயலான சங்கதி அல்ல என்பது உறுதிப்படுகிறது!


புராதன விளக்கு ஒன்றை எனக்கு விற்ற வியாபாரி பின்னர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக என்னை விசாரிக்க வந்திருந்தார்!
ஓகோ! அந்த விளக்கு- பெரு மதிப்பு உடையதோ?
நாலாயிரம் ஆண்டு பழமையான அந்த வெண்கல ஹிட்டைட் விளக்கு அரியது.
அதிர்ஷ்டக்காரர் நீங்கள்!
இல்லாமலா உன் அருகில் நிற்கும் பாக்கியம் கிட்டியிருக்கிறது?
பாம்பை வைத்திருக்கும் பாடகனுக்கு அருகில் வேண்டாமே! வேறு மேஜை இருந்தால் சொல்!
தங்கள் வரவு நல்வரவாகுக- அதோ அங்கே அமருங்கள்!
MENU
வேடிக்கையான மனிதர் நீங்கள்! உங்களைப் பற்றியும், நீங்கள் சேகரித்துள்ள அரிய பொக்கிஷங்கள் பற்றியும் விரிவாகச் சொல்லுங்கள்!
ஷாரி அவனை கொண்டு வந்து சேர்த்து விட்டாள்!
சாகஸக்காரி! எதையும் சுலபமாக சாதித்து விடக்கூடிய கைகாரி!


புது வாடிக்கையாளரை எடை போட்டான் கராட்!
கெர்பி சீமான் மாதிரி இருக்கிறான்! எங்கே இருந்து வந்தானென்று அவன் வினா எழுப்பாத பட்சத்தில் மற்ற பொருட்களை நல்ல விலைக்கு அவனுக்கு தள்ளி விட்டு விடலாம்!
பிறந்தது-நியூயார்க்கில்-சரி! மற்ற விவரங்கள்?
சமிக்ஞையை எதிர் பார்த்து நேரத்தை ஓட்டிக் கொண்டிருந்தாள் ஷாரி!
வேறு குறிப்பிட்டுச் செல்லும்படியாக ஏதுமில்லை-ஷாரி! உன்னைப் பற்றிச் சொல்லேன்-கேட்போம்!
எதிர் பார்த்த சமிக்ஞை வந்ததும்-
ஓ-ரிப்! அதோ-அப்துல் கராட்-அட்டகாசமான பேர்வழி! அவரை சந்தித்துப் பேசுங்களேன்!
அப்துல் கராட்? அவரை நான் சந்திப்பதை நீ விரும்பினால் மறுப்பேது!
நான் இங்கே வரவழைக்கப் பட்டது இதற்குத்தானே?
இருவருக்கும் பொதுவான விஷயங்கள் நிறைய உண்டு. அரிய பொக்கிஷங்களை சேகரிப்பதில் அவருக்கும் நிறைய ஆர்வம் உண்டு!
அங்கே நடப்பதை அலி கவனித்துக் கொண்டிருந்தான்-
மிஸ்டர் டெஸ்மாண்ட்டின் பாஸ் இந்த மாதிரி இடத்துக்கு ஏன் வந்தார்-ஏதோ விஷயம் இருக்கு!


அவரை கூப்பிடட்டுமா?
உன் இஷ்டம்!
அரும் பொருள் சேகரிப்பவர்களை சந்திக்க எனக்கு ரொம்பப் பிடிக்கும்!
மறைவிடத்திலிருந்த அலியை இன்னொருவன் பார்த்துவிட்டான்-
அந்த வியாபாரி கொலை பற்றி இவனுக்கு ஏதாவது தெரிந்திருக்கலாம்!
ஹாய்! கெர்பி அப்துல் கராட்டை சந்திக்கிறார்!
அப்துல் கராட்டின் பர்ஸை தேட்டை போட முடிந்தால்-
எதிரி நெருங்கியதை அலி அறியவில்லை!
அடேய்-பொடியா? இங்கே என்ன பண்ணிக்கொண்டிருக்கிறாய்?
சும்மா நின்னு வேடிக்கை பார்த்துக்கிட்டிருந்தேன்- அவ்ளோதான் விட்டுடுங்க-
ஓடிப் போயிடு இங்கிருந்து!


மறுபடியும் வந்தால் மென்னியை முறிச்சுடுவேன்!
நன்றி! நன்றி ஐயா!
ஐயோ! என் வாட்ச்?
இதை நான் கட்டிக்கறது நியாயமில்லே! சந்தையிலே நல்ல விலை கிடைக்கும்னு நெனைக்கிறேன்!
படுக்க இடம் தேடினான் அலி-
கராட் பொல்லாத ஆள்னு கெர்பி சுலபமா தெரிஞ்சுக்கிடுவார்னு நம்புறேன்!
அந்த அரிய ஹிட்டிடே விளக்கை மிககுறைந்த விலைக்கு நீங்க தட்டிக் கொண்டு போய்விட்டதில் நிறையப்பேருக்கு பொறாமை!
எதிர்பாராத அதிர்வும் எனக்கு! ஆனால் அந்த வியாபாரி- பாவம் கொலையுண்டு விட்டார்!
பொறுப்பில்லாமல் கோட்டை விட்ட தப்புக்கு விலையாக உயிரையே பலி கொடுக்க நேர்ந்து விட்டது!
அதில் சம்பந்தப் பட்டிராவிடில் எப்படி இவனுக்கு இதெல்லாம் தெரிந்திருக்கும்?


அப்படி என்ன தப்பு பண்ணி விட்டார் - அந்த ஆள்?
உன்னோட ஆள் தான் அவன் - இல்லையா?
புதுப்பித்துத் தர கொடுக்கப்பட்ட அந்த அரிய-
விளக்கை கைத் தவறுதலாக மற்ற வியாபாரப் பொருட்களோடு கலந்து வைத்து, உங்களுக்கு சாதாரண விலைக்கு விற்று விட்டான் அந்த மடையன்!
நடந்தது நடந்து விட்டது-போகட்டும்! அரும் பொருள் சேகரிப்பவர்களின் கனவுகளையும் மிஞ்சிய அரிய பொக்கிஷங்களை உங்களுக்கு காட்டுகிறேன்-வாருங்கள் என்னோடு!
போவோமா - ஷாரி?
என்னை இங்கே கொண்டுவந்து சேர்த்தவனே நீதானே!
ஓ - போவோமே!
நல்லது! என் காரை வரவழைக்கிறேன்!
சற்றைக்கெல்லாம் கராட்டோடு ரிப்பும் ஷாரியும் காரில் பயணமாயினர்-


சற்றைக்கெல்லாம் பாலைவனத்தின் ஒரு பகுதிக்கு சென்றது கார்!
கராட்! எதிர்பாராத அதிர்ஷ்டம் காத்திருக்கிறது! இந்த சமாதியை இதுவரை யாருமே தொட்டதில்லை போலும்!
நம் அதிர்ஷ்டம் என்று சொல்-! சரி-எங்கே இருக்கிறது?
அதோ! இன்னும் ஒரு மணிநேர வேலை பாக்கியிருக்கிறது-நீங்கள் வந்து சேர தாமதித்தோம்!
வாருங்கள் கொர்பி! ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மூடப்பட்ட சமாதி திறக்கப்படும் அரும் காட்சி உங்களுக்காக காத்திருக்கிறது!
வெரிகுட்! வாங்கள்-போவோம்!
இன்ஸ்பெக்டர் அகமது எதிர்பார்த்ததை விட விவகாரம் பெரிசு என்று தோன்றுகிறது!
தோண்டும் வேலை தொடரட்டும்! சமாதியின் கதவை திறங்கள்!
சமாதியை தோண்டுவது பாவகாரியமில்லையோ? எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது, ரிப்!
சாபத்திற்கு உள்ளாகும் அபாயம் இல்லாமலில்லை!
எனக்குக் கூட போய்விடலாம் என்றுதான் தோன்றுகிறது!


விளக்கு ஒளியின் துணையோடு, சமாதியின் நுழைவாயிலை தகர்க்கும் முயற்சி தொடர்ந்தது.
என் கண்ணெதிரே சமாதியை கொள்ளையடிக்கப் போகிறார்கள். நான் யாரென்று அறியாத முட்டாள்கள்!
அப்போது-கராட்டின் காரில்.
அங்கே என்ன குறட்டை சப்தம்? எல்லோரும் தான் இறங்கிப்போய் விட்டார்களே!
குழப்பத்தோடு அவன் காரை நெருங்குகிறான்.
யாராக இருக்கும்?
எழுந்திருடா-நாயே! இங்கே என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்?


மன்னிச்சுடுங்க! படுத்தேன் - அப்படியே என்னை மறந்து தூங்கிட்டேன்!
அதுக்கு உனக்கு இந்த சொகுசுக் கார்தான் கிடைத்ததா - குட்டிச் சாத்தானே!
உன்னை இப்போ - கண்ட துண்டமாக வெட்டி -
சும்மா மிரட்டாதீங்க - என்னோட நண்பரோட நண்பர் மிஸ்டர் கெர்பி ஒரு டிடெக்டிவ் - ஜாக்கிரதை!
எ - என் - என்ன சொன்னாய்? கெர்பி டிடெக்டிவா?
நம்பர்-1 டிடெக்டிவ்! தெரிஞ்சுக்கோங்க!
அவரோட பிரண்டு டெஸ்மாண்ட் என்னோட பிரண்ட்! இப்போ கெர்பி காரோட விருந்தினர் -
ஐயா யாருன்னு இப்போ புரிஞ்சுதா? கத்தியை மடக்கி உள்ளே வையுமய்யா!
டிடெக்டிவா? ஓகே.ஏ -!



கொர்பி டிடெக்டிவ்னு உனக்குச் சொன்னது யார்?
ஏன்? டெஸ் மாண்ட்தான்!
சரி-சத்திய மாகச் சொல்-
போதும்! ஓடிப்போய் விடு இங்கிருந்து-திரும்பிப் பார்ராமல்!
தன் விருந்தினர் ஒரு போலீஸ் அதிகாரி என்று கராட்டுக்குத் தெரியாது-எச்ச ரிக்க வேண்டும்!
இன்ஸ்பெக்டர் அகமது அனுப்பி வைத்த ஆளாக இருக்குமோ?
அந்த உண்மையை நான் சொல்லி யிருக்கக் கூடா தோ? நடுக் காட் டிலே இப்படி மாட் டிக் கிட்டேனே!


இந்த பாடாவதி பாதையிலே சொகுசுக் காரை நான் ஓட்டி வருவதற்கு கராட் என்னே கோபித்துக்கொள்ளக்கூடும்-ஆனால், தெரிந்த உண்மையை நான் உடனே அவரிடம் சொல்லாவிட்டால் ஆபத்து!
ஏத்திக்க மாட்டியா-சரி-போ-போ இந்த பாவம் உன்னே சும்மா விடாது!
நொந்துபோ வருகை அலி நகரத்தை நோக்கி மெள்ள நடக்கலானன்-
இன்னும் ஓரிரு நிமிடங்களில் வழி ஏற்பட்டு விடும்!
சமாதியின் பிரதான நுழை வாயில் அசைந்து கொடுத்தது-
ஓ-ரிப்! ஆயிரம் ஆண்டுகளாக மூடிக் கிடந்த சமாதியின் உள்ளே இருக்கும் காற்று விஷமாகியிருக்காதோ?
நான் அப்படி நினைக்கவில்லே ஷாரி! நாற்ற மடிக்கும்-அவ்வளவுதான்!
ஆகா!


நகரை நோக்கி போய்க்கொண்டிருந்தான் அலி.
என்றாவது ஒரு நாள் என கிட்டேயும் ஒட்டகம் இருக்கும், யார் கேட்டாலும் மறுக்காம எத்திப்பேன்!
மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பின் இவ்வழியாக நுழையும் முதல் நபர்கள் நாம்-மிஸ்டர் கெர்பி!
இதோ! பொக்கிஷங்களில் அரிய பொக்கிஷம்!
பலகோடி பெறும்!
சந்தேகமில்லாமல்!
அதுசரி-இவ்வளவு பிரம்மாண்டமான புதையல்கண்டுபிடிப்பை அரசு அதிகாரிகளுக்கு தெரியப் படுத்துவீர்களல்லவா?
நோ-!எனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது-;


பேராசையால் காரட்டின் விழி கள் மின்னின-
என் நெடுநாளைய முயற்சி முடிவில் பலனளித்து விட்டது!
அலெக்ஸாண்டர் காலத் திற்கும் முன்னால் இந்த அரசர் இங்கே சமாதியில் வைக்கப்பட்டிருக்கிறார்- அடேயப்பா!
அரசுக்கு இதை தெரிவிக்க வேண்டும்!
என் கடும் பிர யத்தனத்தின் பலன் பறி போககாரணமாக இருக்கும் எவனையும் நான் மன்னிக்க மாட்டேன்!
கெர்பி போலீஸ் அதிகாரி என்ற உண்மையை தெரி விக்கும் எனக்கு காரட் தாராளமாக பரிசளிக் கும்!
அதோ-விளக்கு வெளிச்சம்! இன்னும் காலம் கடந்து விட வில்லை என்று நம்புகிறேன்-
சமாதியினுள்ளே-
மூவாயிரம் ஆண்டு வயதான பிரேதங்கள் அம்மம்மா-நினைக் கும் போதே நடுக்க மெடுக்கிறது!
சரித்திர முக்கியத் துவம் வாய்ந்த இடம்- புதை பொருள் ஆரா- ய்ச்சியாளர்களின் கனவு பூமி!
கல்லால் ஆன சவப் பெட்டியின் மூடியை அகற்ற ஒத்தாசை பண்ணுங்கள்-


உள்ளே என்ன இருக்கிறது என்று தெரிந்துகொள்ளும் ஆவலை என்னால் அடக்க முடியவில்லை! ம்ம்- சீக்கிரம் கேர்பி!
ஓ.கே., கராட்!
இதை கலைக்க இஷ்டமில்லைதான்! மறுத்தால் பொல்லாப்பு வந்து....
ஐயோ-வேண்டாம்! சவப் பெட்டியை திறந்தால் சாபக்கேடு வரக்கூடும்!
மூடியை அகற்றியதும்-
பிரமிப்பூட்டும் காட்சி-
கீர்த்தி பெற்ற மன்னர் போலும்! நூற்றாண்டின் தலையாய கண்டுபிடிப்பு இது கராட்!
அந்தக் கதையில் எல்லாம் எனக்கு அக்கறையில்லை! இந்த தங்கம்- இந்த நவரத்னங்கள்- ஆகா-
திடீரென்று விபரீதம் முளைத்தது-
ரீய்-! ஐயோ!


பீதியும், குழப்பமும் தலை தூக்கியது அங்கே
ஐயோ! சபிக்கப்பட்ட இடம் இது-ரிப்!
கையில் அகப்பட்டதை எடுத்து எறிந்து அந்த ஜந்துவை துரத்தியடித்தார் ரிப்!
பயப்படாதே ஷாரி-சாதாரண வௌவால் தான்!
வித்தியாசமாக இருக்கிறதே! அபயம் கோரி என்னிடம் வருவதற்குப் பதில் அவரிடம் போய் ஒட்டிக்கொண்டாளே இந்தப் பெண்!
ரிப்-எனக்கு உடம்பெல்லாம் நடுங்குகிறது-
வௌவால் போய் விட்டது ஷாரி!
இப்போதைக்கு இங்கே எஞ்சியிருப்பது செத்துப் போன மன்னரும், நாமும் தான்!
ம்ம்ம்-ஷாரியின் போக்கு சரியாகப் படவில்லை! வந்த காரியத்தை மறந்து விட்டாளே!


இ-இந்த மண்டையோடு-பப்-ப-பயங்கரம்! என்னை ஆதரவாக அணைத்துக் கொள்ளுங்கள் ரிப்!
பீதியடையாதே ஷாரி! பயப்பட ஏதுமில்லை இங்கே!
ஆணழகர்களிடம் வசமிழந்து போகிறுள் இந்தப்பெண். எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை இவளை!
அவசர செய்தி ஒன்று! அப்துல் கராட் எங்கே இருக்கிறார்?
சமாதியினுள்ளே போயிருக்கிறார்! அப்படி என்ன அவசர செய்தி கொண்டு வந்திருக்கிறாய்?
அதை அவரிடம் தான் சொல்ல வேண்டும்!
பிரபு-உங்களிடம் கொஞ்சம் தனிமையில் பேச வேண்டும்!
அங்கேயே நில்-வருகிறேன்!
முக்கால்வாசி தொலைவு எங்களோடு வந்த டிரைவர் அல்லவா இவன்? இங்கே ஏன் வந்தான்?


மன்னியுங்கள் கெர்பி - இதோ வந்து விட்டேன்!
பரவாயில்லை!
டிரைவரின் குரலில் நடுக்கம் - ! ஏதோ விபரீதம்!
முட்டாளே! இங்கே ஏன் வந்தாய்?
அடியேனை மன்னியுங்கள் பிரபு!
கெர்பி ஒரு டிடெக்டிவ் என்று அறிய நேர்ந்தது. ஓடோடி வந்தேன் - உங்களிடம் சொல்ல!
என்ன - கெர்பி போலீஸ் அதிகாரியா? எப்படி தெரிந்து கொண்டாய்?
அவருடைய நண்பனின் சகா ஒருவனிடமிருந்து பிரபு!
'போலீஸ்' என்ற வார்த்தை காதில் விழுகிறது. என்னை தெரிந்து கொண்டு விட்டார்களோ!
ஆமாம் - அப்படித்தானிருக்கும்! இங்குள்ள பொக்கிஷங்களை கண்டதும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்வதற்குப்பதில் அரசுக்கு தகவல் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்!


வா-ஷாரி! வெளியில் போய் சுத்தமான காற்றை சுவாசிப்போம்!
என்னை தெரிந்து கொண்டுவிட்டார்கள்! மோதலை வெளியில் வைத்துக் கொள்வதுதான் உசிதம்!
ஆனால்-
ஜாக்கிரதை! திரும்புங்கள் மறுபுறம்!
வெட்டுண்ட மரம் போல் சரிந்தார் சிப்-
பாவி-இவரை கொன்று விட்டாயே!
புதைக்க இவனை வேறெங்கும் தூக்கிப் போக வேண்டிய அவசியமேயில்லை அன்பே ஷாரி!


இ-இவரை ஏன் தாக்கினாய்? இவர் என்ன தப்பு செய்தார்?
அடேயப்பா-இவர் மீது உனக்குத் தான் எவ்வளவு கரிசனம்!
திடீர் திருப்பம் நிகழ்ந்தது அங்கே!
இந்த அடையாள அட்டை-இவர் போலீஸ் அதிகாரி என்பதை உறுதிப்படுத்துகிறது! அடடா-எப்படியொரு வாடிக்கையாளரை அழைத்து வந்திருக்கிறாய் நீ?
சமாதியில் அரிய பொக்கிஷங்கள் இருப்பதை தெரிந்து கொண்ட இவரை உயிரோடு விட்டால் ஆபத்து!
நோ-இவரை அழைத்து வந்தவள் நான்-கொலையில் எனக்கும் பங்கு வர நான் சம்மதிக்க மாட்டேன்!
யாரங்கே போவது?


வழிப் பயணிகள் போய்க் கொண்டிருக்கிறார்கள் பிரபு.
அவர்கள் நம்மை பார்த்துவிடக் கூடாது!
வா-ஷாரி! இந்த துப்பறியும் நாய் அமைதியாக உயிர் விடட்டும்!
விடு என்னை-நான் அவ்வளவு கொடுமைக்காரி இல்லை!
அப்படியானால் நீயும் சேர்ந்து ஒழிந்து போ!
அவனோடு சேர்ந்து கொண்டு எனக்கு துரோகம் செய்ய நினைத்தவள் தானே நீ!
கொலைகாரா! உன்னோடு வருவதை விட இவரோடு செத்துபோவதைத் தான் விரும்புகிறேனடா!
சமாதியை மூடுங்கள்!


ஆறுல்-பிரபு! மற்றவர்கள் வெளிவர வில்லையே?
சொன்னதைச் செய்! மூடு-சமாதியை!
ராட்சஸ பலகைக் கல் தூக்கி நிறுத்தப்பட்டது.
இறுக மூடிவிடுங்கள்!
உள்ளே-மயான அமைதி நிலவியது!
நுழைவாயிலை செடி, கொடிகளை வைத்து மூடி மறைத்தார்கள்-
அரசருக்குத் துணையாக வேறு இரு ஆவிகள் சேர்ந்துகொள்ளட்டும்-நம் பொக்கிஷத்தை எடுத்துச் செல்ல வேறொரு நாள் வருவோம்!
ரிப்! ரிப்! உங்களுக்கு எப்படி யொரு கொடுமை இழைத்து விட்டேன்-ஐயோ!


சமாதியை இறுக மூடி. மறைத்தாகி விட்டது பிரபு!
போங்கள் இது பற்றி யாரும் வெளியில் மூச்சுவிடக் கூடாது-ஜாக்கிரதை!
ஓசைப்படாமல் அங்கிருந்து நழுவியது அந்தக் கயவர் கும்பல்-
ஓ-முனகல் வருகிறது! ரிப் செத்துவிடவில்லை!
கடவுளே! நானும் அந்த அரசர் மாதிரி எலும்புக் கூடாகிவிட்ட தான பிரமை!
ரிப்! ரிப்-எனக்கு இப்போது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா!
ஆனால்-நீங்கள் யாரென்று கராட்டுக்கு தெரிந்து விட்டது-நம்மை இங்கே உயிரோடு சமாதி வைத்து விட்டான் அந்தக் கிராதகன்-
கவலைப்படாதே ஷாரி! எல்லாம் நல்லபடியாக நடக்கும்!
உள்ளே பிராணவாயு வெகு சீக்கிரம் தீர்ந்து போகலாம்!


சுவர் ஓரடி கனம் இருக்கும்-எவ்வளவு கத்தினுலும் வெளியில் இருப்பவர்களுக்கு கேட்காது!
நிலைமையை தீவிரமாக ஆராய்ந்தார் கெர்ரி
வாவ்! கதவை இம்மியும் அசைக்க முடிய வில்லை!
ஓ-ரிப்! இங்கேயே நாம் செத்து மடிய வேண்டியது தானு?
மரணம் பொறுமையோடு காத்திருந்தது-
பிராணவாயுவை சிக்கனமாக செலவழிப்போம்-ஆனுலும் உள்ளே ஒரு விளக்கு இருப்பது உற்சாக மூட்டும்!
ஆமாம் ரிப்-சற்று மனத் தெளிவு ஏற்படுகிறது!
சீ-இப்படி மன முடைந்து போகத் தேவையில்லை ஷாரி!
கராட் மனம் மாறி திரும்பி வரலாம்! நாம் காணுமல் என்ருல் பழி அவன் மீது வரும் என்று அறியாதவனல்ல!
ஆனல்-ஹோட்டல் அறையில்-
மணி மூன்று-
இன்னும் சார் திரும்பி வந்த பாடில்லை-


அவர் எப்போதுமே இப்படித்தான். எப்போதுபோவார்.
எப்போது திரும்பி வருவார் என்று சொல்லவே முடியாது!
ஒரு முனையிலிருந்து உதவி வரும் வாய்ப்பு இல்லாதுபோயிற்று.
வேறொரு முனையிலும் நிலவரம் அதுதான்.
உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்தித்து இதை பருகுகிறேன் ரிப், ஷாரி!
ரிப்-எனக்கு சோர்வாக இருக்கிறது!
ஓய்வு எடுத்துக் கொள்!
ஓய்ந்து கிடந்தால் காற்று கூடுதல் நேரத்துக்கு போதுமானதாக ருக்கும்!
அந்தப் பயங்கர உண்மையைப் பற்றி அலட்டிக்கொள்ளாமல் மலைவாயிலினுள் சென்று மறைந்தது நிலா.
தூங்கட்டும்! மரணம் சம்பவித்தால் அந்த அவஸ்தையை அனுபவிக்க மாட்டாள்.
விளக்கின் சுடர் பழுப்பாகி விட்டது. பிராணவாயு வேகமாக குறைந்து வருவதற்கான அறிகுறி!


இவளை வசதியாக படுக்க வைத்து விட்டு, ஒரு ஜீவ மரணப் போராட்டம் நடத்த வேண்டும்!
இந்த பழங்கால ஈட்டியும், கடப்பாறையும் கருவிகளாக பயன்படும்!
இந்த கற்பலகை சற்று விரிசல் கண்டிருக்கிறது-பெயர்த்து எடுக்க வருமோ?
நேரத்தோடு போட்டி! துரிதமாக இயங்கினார் ரிப்.
அப்படியே பெயர்த்து எடுத்துவிட முடிந்தாலும் மறுபக்கம் என்ன இருக்குமோ?
ஊஹூம்-முடியவில்லை! ஓய்வு தேவை-காற்று கெட்டு வருகிறது-
விலகுகிறது!


வெளியே காலைக் கதிரவனின் பொற்கிரணங்கள் பூமியில் பரவிய வேளையில்-
ஒரு வழியாக பெயர்த்து விட்டேன்,
உள்ளே ஜிவமரணப் போ-ராட்டம் ஒன்று தொடர்ந்து கொண்டிருந்தது-
கெட்டியான மண் சுவர்!
தொலைந்தோம்! எங்களுக்கு இங்கேதான் உயிரோடு சமாதி!
கெர்பியின் முதல் முயற்சி படு தோல்வி!
ஸார் இன்னமும் வரக்காணோமே! கவலைப்படாமல் இருக்க முடிய வில்லையே எனக்கு!
போலீஸ் இன்ஸ்பெக்டர் அகமதுக்கு ஏதாவது தகவல் தெரிந்திருக்க லாம்-போய் விசாரிக்க வேண்டும்!


ஹலோ மிஸ்டர் டெஸ்மாண்ட்! சௌக்கியமா?
மனது சரியில்லே யடா-!
ஏன் - உங்க பாஸ் அந்த காராட்டேகட குத்தி அலேஞ்சிக் கிட்டிருக்காரேன்னு?
இந்த ஈட்டியை வைத்து ஒரு துளை போட முடியு- மேயானல்-
தன் செங்கோலை கொட்டைப் புளியாக நான் பயன்படுத்து வது தெரிந்தால் அரசர் கோபித்துக் கொள்ளக் கூடும்!
சரியான எத்தன்! பித்தலாட்ட பேர் வழி!
நேத்திரவு பாஸ் அவ- ரோடு இருந்தாரா என்ன?
ஆமா - மலைப் பகுதியை நோக்கி போறாங்க - இரகசியமா நானும் போனேன் - அங்கேர்ந்து டவுனுக்கு கால்கடுக்க நடந்தே வர்ற மாதிரி ஆயிட்டுது!


இருந்த கொஞ்ச நஞ்ச சக்தியையும் திரட்டி முயற்சியை தொடர்ந்தார் ரிப்-
ஈட்டி இறங்கு கிறதே தவிர துளை ஏற்பட்ட பாடில்லை!
நகரில் -
அந்த கயவர் கும்பல் ஏனோ உங்க பாஸ் கிட்டே பயப் படுது!
எதை வைத்து அப்படி சொல்கி றாய்?
டிரைவர் கிட்டே கெர்பி ஒரு டிடெக்டிவ், என்னோட பிரண்டு அவர்கிட்டேதான் வேலை பார்க்கிறார்னு சொன்னதும் வெல வெலத்துப் போய் என்னை வுட்டுட்டான்!
கராட்டோட டிரைவர் கிட்டேயா சொன்னாய்- டிடெக்டிவ்னு?
ஏன் அது நிஜம் தானே!
நிஜம்தான்! அதற்காக? கண்டவர்களிடமெல்லாம் உளறி வைக் கிறதா?
வாடா பயலே! உடனடியாக இன்ஸ்பெக்டர் அகமதை போய் சந்திப்போம்!


வேண்டாம்! என்னை போலீஸ்கிட்டே ஒப்படைக்காதீங்க-வுட்டுடுங்க-
உளருதே! நாம் வேறே பேசப் போகிறோம்!
அசதி என்னை அமுக்கப் பார்க்கிறது - படுத்தால் அதுவே இறுதி நித்திரையாகிவிடும்!
சரக்கென்று ஈட்டி இலகுவாக முன்னேறியது-
துளை ஏற்பட்டு விட்டது! ஆனால் குழாயினுள் மண் அடைத்துக் கொண்டால் காற்று உள்ளே வராதே!
கைக்குட்டை ஷூ லேஸ் கொண்டு குழாயை பாதுகாப்பாக நுழைத்துவிட முடியும்!
இப்போது குழாயின் மறு முனையில் உள்ள கைக்குட்டையை ஊதி அப்புறப் படுத்த எனக்கு சக்தி இருக்குமா?



தம் பிடித்து ஊதினார் ரிப்-வெற்றி!
குழாய் வழியாக சுத்தமான வெளிக் காற்றை உறிஞ்சினார்-
ஷாரி மயங்கி விட்டாள்-சுத்தமான காற்றை அவள் சுவாசிக்கவே இந்த வழிமுறை!
ஆங் - மெள்ள அசைகிறாள்!
காலம் கடந்துவிடுமுன் ஷாரி காப்பாற்றப்பட்டு விட்டாள்-
சுத்தமான வெளிக் காற்றை நாம் சுவாசிக்கவகைசெய்துவிட்டேன்!
ரி-ரிப்-என்ன ஆச்சு எனக்கு?
உதவி வரும் வரை நாம் மாறி, மாறி இந்தக் காற்றை சுவாசித்து தாக்குப் பிடிப்போம்!


முறை வைத்து வெளிக் காற்றை உறிஞ்சி உதவியை எதிர் பார்த்து காத் திருந்தனர்.
பகல் வெளிச்சம் தெரி கிறது! ஆனால் அக்கம் பக்கத்தில் யாரும் இருப்பதான ஓசை எதுவும் கேட்கவில்லை.
இன்ஸ்பெக்டரை நாங்கள் பார்க்கணும்!
'நாங்கள்' என்றால்?
போலீஸ் சீஃப் சீக்கிரமே கோமாளுக அல்லா அருள் புரிவாராக!
நிறுத்துடா பொடியா. உன்னை எனக்கு நன்றாகவே தெரியும்!
விரைவில் வளரப் போகும் என் அழகுத் தாடியின் மீது ஆணை. கொபிக்கு துரோகமிழைக்க நான் நினைக்கவேயில்லை! அவரை நான் கடைசியா பார்த்த இடத்துக்கு உங்களை கூட்டிட்டுப் போறேன். வாங்க!
அதையடுத்து சீறிக் கொண்டு பறந்தது போலீஸ் கார் ஒன்று.



கராட்டோட சொகுசுக் கார் தடம் இது! அதோ தெரியறது - அவங்களை இங்கேர்ந்து ஏத்திக் கிட்டுப்போன ஜீப் போட தடம்!
டிடெக்டிவ் மூளைடா உனக்கு!
நகரின் விளிம்பில் -
ரிப் கெர்பி ஸார் மாதிரி நானும் ஒருநாள் டிடெக்டிவா வர்றேனா இல்லியா பாருங்க!
ஜீப் திரும்பி வந்த தடமும் இருக்கிறது! எங்கே வரை போய் வந்திருக்கிறது என்று ஆராய்வோம்!
ஜீப் தடம் இங்கே நின்று விட்டது - காலடித் தடங்கள் நிறைய தென்படுகின்றன!
ஷாரி! வெளியே ஆள் நடமாட்டம் தெரிகிறது!
உதவி! உதவி! உதவி!


ஒரு எல்லைக்கு அப்பால் கால் தடங்களும் இல்லை ஸார்!
வேறு தடயம் ஏதும் தென்படக் காணோம்-திரும்பி விடுவோமா?
காட்டுக் கூச்சல் போட்டும் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க முடியவில்லையே!
ஐயோ! அவர்கள் போய் விட்டால் நம் கதி?
உன் உடையிலிருந்து ஒரு நூலை உருவி எடு ஷாரி-சீக்கிரம்!
காகிதம் ஒன்றில் எதையோ வேகமாக கிறுக்கினார் ரிப்-
'சமாதியினுள்ளே-ரிப்' இது போதும்!
அரசரின் அங்கியிலிருந்து ஒரு இறகினை பிடுங்கி எடு!
இந்நேரத்திற்கு கெர்பி ஹோட்டலுக்கு திரும்பி வந்து சேர்ந்திருக்கலாம் டெஸ்மாண்ட்.
ஆமாம் இன்ஸ்பெக்டர்-இங்கே ஒரு தடயமும் தென்படக் காணோம்!


சுருட்டிய காகிதத் தோடு நூலால் இறகுகளை கட்டி-
கட்டி?
குழாய் வழியாக பலம் கொண்ட மட்டும் ஊதி இதை வெளியே அனுப்பி வைப்போம்?
போகலாமா?
வே-வேறு வழி!
வாருங்கள் போகலாம்!
நமக்கு அதிர்ஷ்ட மிருந்தால் இது அவர்களை சென் றடையும்!
மறுகணம்- 'ஜிவ்' வென்று வெளி யேறிப் பறந்தது ஒரு சிறு இறகுக் கோல்.



அதிர்ஷ்டம் அவர்களை ஏட்டு விட வில்லை!
ஹே என்ன பறவை அது? புதுமாதிரியா இருக்கு!
டேய் பொடியா- ஓடிவாடா!
பறவை இல்லை இது! இறகுப் பந்து மாதிரி இருக்கு!
அட - ஏதோ எழுதியிருக்கே!
ஸார் - ஸார் - இதைப் பாருங்க!


'சமாதியி ஜுன்ளே-ரிப்' இதை எங்கே டா கண்டெடுத் தாய்?
காற்றிலே பறந்து வந்திச்சி-ஏதோ பறவையாக் கும்னு நெனேச் சேன் முதல்லே!
மீண்டும் தேடும் படலம் தொடங்கியது-
இங்கேர்ந்துதான் வந்திச்சி! அதோ ஒரு குழாய்!
நமக்கு நேர் எதிரே வெளியே இருக்கிறார்கள் ஷாரி!
ஆண்டவனே-நன்றி!
இந்த குன்றின் அருகேயுள்ள செடி கொடிகளை அப்புறப் படுத்துங்கள்!
எதிரிகள் மூடி மறைத்த நுழைவாயில் கண்டுபிடிக் கப்பட்டது-
ரிப்-கதவு திறக்கிறது!


சமாதியின் பிரம்மாண்டமான நுழை வாயில் கதவு நகர்த்தப்பட்டது.
ஆகா-! சூரிய வெளிச்சம்! தூய வெளிக் காற்று!
ஹாய்ய்! டிடெக்டிவையே கண்டு பிடிச்ச நான் ஒரு சூப்பர் டிடெக் டிவ்தான்- இல்லியா?
கெர்பி! நலம்தானே?
ஆமாம் இன்ஸ்பெக்டர்! எப்படியோ மரணத்தை வென்று விட்டோம்!
நம்மை காப்பாற்றியவர்களுக்கு நன்றி! அவர்களை முத்தமிடத் தோன்றுகிறது எனக்கு!



உன்னையும்தானடா!
ஆவ்!
இரவை யாருடன் நாங்கள் கழித்தோம் என்று காட்டுகிறேன்-வாருங்கள்!
இந்த நூற்றாண்டின் அரியதோர் புதை பொருள் கண்டு பிடிப்பு-இல்லையா?
கராட்டை கைது செய்யுங்கள்-இந்த பொக்கிஷம் கொள்ளை போவதை தடுக்கவும் கொலையை துப்புத் துலக்கவும் உங்களுக்கு வாய்ப்புக் கிட்டும்!
உடனே ஏற்பாடு செய்கிறேன்!
ஆமாம்! இதை காவல் காக்க உடனே ஏற்பாடு செய்கிறேன்!
நீங்கள் என் அலுவலகத்திற்கு வந்து இங்கே நடந்தது பற்றி விரிவான அறிக்கை ஒன்று எழுதிக் கொடுங்கள்!
எல்லோரும் நகருக்கு திரும்பினார்கள்-


கார் போலீஸ் தலைமையகத்தை சென்றடைந்ததும்
உங்கள் அறிக்கை கைக்கு வந்ததும் கராட்டை கைது செய்ய ஏற்பாடு செய்கிறேன்.
டேய்-எங்கே போகிறாய்?
நானும் அவங்களோட உள்ளே போகணும்!
தறுதலை! ஓடிப் போயிடு இங்கேயிருந்து!
நானொரு டிடெக்டிவ்! மிஸ்டர் கெர்பியை நான் கண்டு பிடிச்சேன்!
உளறாதே! கண் காணாமல் ஓடிப் போய் விடு!


பின்னர்-
அறிக்கை ஜோராக இருக்கிறது கெர்பி- கராட்டை கைது செய்துவர ஆட்களை அனுப்பியிருக்கிறேன்.
நல்லது- இன்ஸ்பெக்டர்!
நீங்கள் மிட்கப் பட்டதை கொண்டாட- இது-
ஹூம்! நல்லது செய்தேன்- ஆனால்- துரத்தியடிச்சுட்டாங்க!
நல்லதுக்கு காலமில்லே! அதனாலே ஸ்பைடர் மாதிரி நானும் ஒரு சூப்பர் கிரிமினலா ஆகப் போறேன்!
இப்போது நினைத்துப் பார்த்தால் எல்லாமே கெட்ட கனவு மாதிரி தோன்றுகிறது ரிப்!
இன்னமும் என்னால் சகஜமாக சுவாசிக்க முடியவில்லை!
ஆங்-எங்கே போய்விட்டான்- நான் அனுப்பிய செய்தியை கண்டெடுத்த சமர்த்துப் பொடியன்?


விஷயம் தெரியாமல் அடித்துத் தாக்கி விட்டேன் ஸார்!
அநியாயம்! அவனை உடனே தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்!
நாலா திசைகளிலும் ஆட்கள் பறந்தனர்-
அலி அழைத்து வரப்பட்டான்!
உன்னைப் பற்றி நான் என்னவெல்லாம் திட்டமிட்டு வைத்திருக்கிறேன் தெரியுமா?
உன்னை ஒரு நல்ல ஸ்கூலில் சேர்க்கப் போகிறேன்!
ஐயோ-அப்புறம்?
டிடெக்டிவா வரணும்னு முதலில் நீ நன்றாக படித்துத் தேறவேண்டும்! அத்தோடு நல்லதொரு குடும்பச் சூழலில் வளர வேண்டும்!
எப்படியோ நான் டிடெக்டிவா வரணும்!
செலவு முழுவதும் என்னைச் சேர்ந்தது!




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி-626123. போன்: 21159. வெளியீடு எண்: 79.
அச்சிட்டோர்: ஸ்ரீ விஜய் புக்ஸ், சிவகாசி-626123.

## சந்தா பற்றி...!

டியர் ரீடர்ஸ்,

சமீப காலமாகவே நமது இதழ்களின் சந்தா விபரத்தை கேட்டு பலர் எழுதி வருகின்றனர்!

நமது இதழ்களின் விலை அவ்வப்போது மாறி வருவதால் சந்தாத் தொகையை சரியாக நிர்ணயிக்க முடியவில்லை. அது தவிர, தபாலில் நாங்கள் அனுப்பும் பிரதிகள் வாசகர்களுக்கு சரிவரப் போய் சேருவதில்லை. இதனால் பல வாசகர்கள் வருத்தப்பட்டு கடிதம் போட நேரிடுகிறது! இது போன்ற காரணங்களால் தற்சமயத்திற்கு புது சந்தாக்களை ஏற்க இயலாமைக்கு வருந்துகிறோம்.

ஜனவரி முதல் சரியான ஏற்பாடுகளை செய்து கொண்டு சந்தா பற்றி விளம்பரப்படுத்துகிறோம். அதுவரை உங்கள் ஊரிலுள்ள புத்தகக் கடைக்காரரை நச்சரித்து நமது காமிக்ஸ்களை வாங்கி வைக்கச் சொல்லுங்கள்!

நிர்வாகி.

## வாசகர் கடிதம்!



★ வெ. வெங்கடேஸ்வரன்,
சா. அய்யம்பாளையம்.


"பொக்கிஷம் தேடிய பிசாசு" படித்தேன், ரிப் கிர்பியின் சாகஸம் பயங்கர சுறுசுறுப்பாக இருந்தது. இரண்டாவது கதையான "மின்னல் மனிதன் மேஜிக்" படு சூப்பர்! ஆரம்பம் முதல் இறுதி வரை 'திடுக்' 'திடுக்' தான்! எங்களின் ஸ்பைடரின் சாகஸத்தை எப்போது வெளியிடப் போகிறீர்கள்?

★ C. ராஜ்குமார், தஞ்சாவூர்.

அட்டைப் படமே ரொம்ப வித்தியாசமாக இருந்தது! ரிப்கிர்பி கதைக்கு படங்கள் மிக அற்புதம்!

★ M. மாலையப்பன்,
சென்னை-2.

"Flying Dutchman" என்ற பிசாசுக் கப்பலைப் பற்றிய கட்டுரையையும் கதையோடு சேர்த்து வெளியிட்டிருந்தால் அருமையாக இருந்திருக்கும்! வித்தியாசமான இதழ்!



★ A. முகமது அமீன்,
திருச்சி-3.

ரிப் கிர்பி, இரட்டை வேட்டையர்கள், காரிகன், ஜான்மாஸ்டர் ஆகியோரது சாகஸங்களை அடிக்கடி வெளியிடுங்கள்!


★ R. ரவிபிரசாத்,
திருத்தணி.

மேஜிக்ஸ் கதையும் சரி, படமும் சரி, அப்படியே 'ரம்போ' சினிமா பார்த்தபிரமிப்பை ஏற்படுத்தியது.



விரைவில் வருகிறது !
மரண மாளிகை !
லயன்
காமிக்ஸ்
ரிப் கிர்பியின் புதிய
சாகஸம் !
ரூ. 3/-



பழி வாங்கும் புயல்!
லயன் காமிக்ஸ்
பழி வாங்கும் புயல்!
டெக்ஸ் வில்லர் சாகசம்!
ஜனவரி வெளியீடு!
விலை ரூ.6/-

# பாராசூட் செய்வது எப்படி?




சதுர வடிவான மெல்லிய துணி ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள் (A). மூலைகளை, படத்தில் காண்பித்தபடி சம அளவில் வெட்டி யெறியுங்கள் (B). சம அளவு என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள ஒரு மூலையில் வெட்டிய துண்டை அளவாகக் கொண்டு மற்றவற்றை வெட்டலாம்.






8 முனைகளிலும் தனித் தனியே வலுவான கயிறுகளைக் கட்டுங்கள். (C) துணியின் முனைகள் சம அளவில் (D) விட்டுக் கட்டப்பட வேண்டியது அவசியம். கயிறுகளை மொத்தமாக இணைத்து முடிச்சு ஒன்று போடுங்கள் (E). இறுதியாக கயிறுகளின் நுனியில், மிதக்கும் பாராசூட்டைத் தரை இறக்கத் தேவையான எடைக்கு பொம்மை வீரனையோ இல்லை உலோகக் குண்டினையோ (மிகக்கனமானதாய் இருக்கக் கூடாது) இணையுங்கள்.



இனி பாராசூட்டைப் பறக்கவிடுவது எளிது. பாராசூட் குடைத் துணியிலிருந்து ஆரம்பித்து எடைக்கல் இறுதியாக இருக்குமாறு சுருட்டுங்கள். வானில் உயர வீசி எறியுங்கள். தானாக அவிழ்ந்து, குடை விரிக்கப்பட்ட பாராசூட் மெதுவாக தரை நோக்கி ஆடி அசைந்து இறங்கி வரக் காணலாம்.


அடுத்த வெளியீடு!
லயன் காமிக்ஸ்
ஏஜெண்ட் காரிகன் துப்பறியும்
ஒரு பனிமலை பயங்கரம்!
ரூ. 3/-


79
லயன்
காமிக்ஸ்
Operation
அலாவுதீன்!